# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1037/2025

Prosecution PW 6

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. நாகராஜன் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.02.2026.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.9.2025 ம் தேதி காலை 6.00 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது சிவக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் பெற்று நிலைய கு.எண்.778/25 ச/பி 303(2)

பிஎன்எஸ் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 7.15 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் நகுல்சாமி, ஜாண்பீட்டர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இட்ம் பார்வையிட்டு பார்வை மகசர் வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் ஜமுனா, கிருஷ்ணகாந்த், சிவக்குமார், நகுல்சாமி, ஜாண்பீட்டர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரிய வந்ததன் பேரில்எதிரியை தேடி வந்தநிலையில் அன்றையதினம் 11.30 மணியளவில் சர்ச் கார்னர் அருகே வாகன தணிக்கையில் இருந்தபோது அவ்வழியே வந்த TN 47 AQ 4216 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபர் திரும்பி செல்ல முயன்றவரை பிடித்து சாட்சிகள் மோகன்ராஜ், பொன்ராஜ் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலும், ஆசைவார்தையும் இன்றி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

2. ஒப்புதல் வாக்குமூலத்தின்படி இந்த குற்ற எண் வழக்கில் TN 67 P 7506 என்ற ஆம்னி வாகனத்தை திருடி வந்ததாகவும் அதை மறைத்து வைத்திருப்பதாகவும் கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியும் பின்னர் எதிரி மற்றும் சாட்சிகளுடன் சென்று எதிரி மறைத்து வைத்திருந்த ஆம்னி காரை எடுத்து ஆஜர்படுத்தியதை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கின் சொத்தான ஆம்னி காரை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்து எனது புலன்விசாரணை முடித்து கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

1. அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் மனு என் முன்னிலையில் எழுதப்பட்டது என்றால் இல்லை. புகாரை யார் எழுதியது என்றால் சிவக்குமார் என்பவர் எழுதினார். திருட்டு சம்பவத்திற்கும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரத்திற்கும் காலதாமதம் என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வாதியால் தாமதம் என குறிப்பிட்டுள்ளது. காலதாமதத்திற்கான காரணத்தை புகார்தாரரின் குறிப்பிட்டு விசாரித்தேனா என்றால் குறிப்பிட்டு விசாரித்தேன் அவர் பலஇடங்களில் தேடிச் சென்று கிடைக்காததால் நிலையம் வந்து புகார் கொடுத்ததாக தெரிவித்தார். திருடப்பட்டதாக கூறப்படும் வாகனம் அ.சா.1 க்கு சொந்தமானதுதானா என்றால் சரிதான். புகார் அளித்த சமயத்தில் ஆர்சி புத்தகத்தின் அசல் பறிமுதல் செய்யவில்லை என்றால் சரிதான், அதற்கு பதிலாக ஆர்சி புக் நகல் ஒன்றை கொடுத்தார். ஆர்சி புக் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். ஆர்டிஓ பதிவுகளை சரிபார்த்து உரிமையை உறுதி செய்யவில்லை என்றால் சரிதான்.

2. இன்சூரன்ஸ் பாலிசி ஆவணங்களை நான் சேகரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாளில் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி சரிவர பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 பொதுசாலையில் வாகனம் நிறுத்தப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான், அ.சா.1 ஐ கரூர் வையாபுரி நகர் பொதுசாலையில் உள்ள எஸ்ஜே ராஜா ஹோட்டல் கடையின் முன்பு நிறுத்தியுள்ளார். வாகனம் நிறுத்தப்பட்ட இடம் பொதுமக்கள் அதிக அளவில் உள்ள இடம் என்றால் சரிதான். அங்கு வந்திருந்த தனிநபர் சாட்சி யாரையும்

விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அருகாமையில் குடியிருந்த சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்த சிசிடிவி காட்சிகள் ஏதேனும் கைப்பற்றியுள்ளீர்களா என்றால் இல்லை. சிசிடிவி கேமராக்கள் சம்பவ இடத்தில் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் வழக்கு கோப்பில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. டோல்கேட் கேமராக்கள் மற்றும் நெடுஞ்சாலையில் உள்ள கேமரா பதிவுகள் எதாவது சேகரித்துள்ளீர்களா என்றால் இல்லை. விசாரணையின்போது எதிரியை கைது செய்ததாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல, கரூர் சர்ச் கார்னர் அருகில் வாகன தணிக்கையின்போது கரூர் நகர காவல்நிலைய கு.எண்.779/2025ல் ச/பி 303(2) வழக்கில் திருடுபோன வாகனத்தில் வந்த நபரை நிறுத்தி சோதனை செய்து விசாரித்து பின்னர் திருடுபோன வாகனத்தை ஓட்டி வந்த நபர் திருடினார் என சொன்னதன் அடிப்படையில் கைது செய்தேன்.

3. எதிரியை கைது செய்தபோது அ.சா.1 அங்கு இல்லை என்றால் சரிதான். கைது செய்யும்போது அந்த பகுதியில் தனிப்பட்ட சாட்சிகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். கைது மெமோவில் பொதுமக்கள் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். கைது குறிப்பாணையில் எதிரியின் தம்பி அஜித்குமார் தொலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. கைது சம்பந்தமாக அருகில் இருந்த சிசிடிவி காட்சிகள் எதுவும் வழக்கு கோப்பில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி குறித்த ஒப்புதல் வாக்குமூலம் மேஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபோதும் வாகனம் கைப்பற்றும்போதும் ஆடியோ வீடியோ பதிவுகள் ஏதேனும் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூல

அடிப்படையில் வாகனம் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். வாகனத்தை கைப்பற்றும்போது அ.சா.1 அங்கு இருந்தாரா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை காவல்துறையினர் அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரியை வாகனத்துடன் தொடர்புபடுத்தும் பொருள் ஆதாரம் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, எதிரி திருடிய வாகனத்தை அவரிடமிருந்தே கைப்பற்றப்பட்டது. விசாரணை நடவடிக்கைகள் அனைத்தையும் விரிவாக கேஸ் டைரியில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. கேஸ் டைரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. திருட்டை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரேனும் வழக்கு விசாரணையில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிதான் வாகனம் ஓட்டியதாக பார்த்த சாட்சியாக ஏதேனும் வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. கைது நடவடிக்கைகள் முறையாக பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அறிவியல் ரீதியாக மின்னணு முறையில் ஆதாரம் சேகரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. காவல்துறை வழக்கமான சாட்சிகளை கொண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரி பொய்யாக வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**